சாந்தலிங்கர் தாண் மலர் வாழ்க

# தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை அறிவியல் தமிழ்க் கல்லூரி, பேரூர்-அஞ்சல், கோவை-641 010

## 2023-2024ஆம் ஆண்டறிக்கை

கோயமுத்தூர், பேரூர் தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை அறிவியல் தமிழ்க் கல்லூரியில் கீழ்க்காண் பட்டப்படிப்பு, பட்டமேற்படிப்பு, ஆராய்ச்சி வகுப்புகளில் 2023-2024ஆம் கல்வியாண்டில் பயின்ற மாணவர் எண்ணிக்கை.

**அரசு உதவி பெறும் பிரிவு**

1 பி.லிட்(தமிழ்) 2 பி.காம் (வணிகவியல்) 3 எம்.ஏ (தமிழ்)

**தற்செல்வப் பிரிவு**

01). பி.காம்(வணிகவியல்) 02). பி.சி.ஏ
03). பி.காம் (பிஏ) 04).பி.காம் (சிஏ)
05).பி.காம்(ஏ&எப்) 06).பி.எஸ்சி (கணிதம்)
07).பி.எஸ்சி (கணிப்பொறியியல்) 08). பி.ஏ(ஆங்கிலம்)
09).எம்.எஸ்சி (கணிப்பொறியியல்) 10). எம்.காம்
11). தமிழ்த்துறையில் எம்.ஃபில், பி.எச்டி., (முழுநேரம் / பகுதி நேரம்)
12).வணிகவியல் துறையில் எம்.ஃபில், பி.எச்டி., (முழுநேரம் / பகுதி நேரம்)
13). கணிப்பொறியியல் துறையில் ஆராய்ச்சிப் படிப்புகள்- எம்.ஃபில், பி.எச்டி

**2023-24ஆம் கல்வியாண்டில் உள்ள மாணவர்கள் எண்ணிக்கை**

1 பி.லிட் (தமிழ்)

| | ஆ | பெ | மொ |
|---|---|---|---|
| முதலாம் ஆண்டு | 16 | 36 | 52 |
| இரண்டாம் ஆண்டு | 16 | 32 | 48 |
| மூன்றாம் ஆண்டு | 20 | 25 | 45 |
| மொத்தம் | 52 | 93 | 145 |

2 பி.காம் (தமிழ் வழி)

| | ஆ | பெ | மொ |
|---|---|---|---|
| முதலாம் ஆண்டு | 29 | 25 | 54 |
| இரண்டாம் ஆண்டு | 24 | 30 | 54 |
| மூன்றாம் ஆண்டு | 18 | 35 | 53 |
| மொத்தம் | 71 | 90 | 161 |

3 எம்.ஏ (தமிழ்)

| | ஆ | பெ | மொ |
|---|---|---|---|
| முதலாம் ஆண்டு | 04 | 14 | 18 |
| இரண்டாம் ஆண்டு | 05 | 08 | 13 |
| மொத்தம் | 09 | 22 | 31 |

**2023-24ஆம் ஆண்டில் தற்செல்வப் பிரிவில் மாணவர்கள்**

**1 பி.காம் (ஆங்கிலம் வழி)**

| | ஆ | பெ | மொ |
|---|---|---|---|
| முதலாம் ஆண்டு | 13 | 17 | 30 |
| இரண்டாம் ஆண்டு | 07 | 10 | 17 |
| மூன்றாம் ஆண்டு | 22 | 27 | 49 |
| மொத்தம் | 42 | 54 | 96 |

**2 பி.காம் (பி.ஏ)**

| | ஆ | பெ | மொ |
|---|---|---|---|
| முதலாம் ஆண்டு | 11 | 09 | 20 |
| இரண்டாம் ஆண்டு | 13 | 10 | 23 |
| மூன்றாம் ஆண்டு | 18 | 22 | 40 |
| மொத்தம் | 42 | 41 | 83 |

**3 பி.காம்(சிஏ)**

| | ஆ | பெ | மொ |
|---|---|---|---|
| முதலாம் ஆண்டு | 17 | 29 | 46 |
| இரண்டாம் ஆண்டு | 28 | 40 | 68 |
| மூன்றாம் ஆண்டு | 54 | 40 | 94 |
| மொத்தம் | 99 | 109 | 208 |

**4 பி.காம்(ஏ&எப்)**

| | ஆ | பெ | மொ |
|---|---|---|---|
| முதலாம் ஆண்டு | 02 | 01 | 03 |
| இரண்டாம் ஆண்டு | 05 | 01 | 06 |
| மூன்றாம் ஆண்டு | 05 | 06 | 11 |
| மொத்தம் | 12 | 18 | 20 |

**5 பி.சி.ஏ**

| | ஆ | பெ | மொ |
|---|---|---|---|
| முதலாம் ஆண்டு | 08 | 07 | 15 |
| இரண்டாம் ஆண்டு | 12 | 12 | 24 |
| மூன்றாம் ஆண்டு | 17 | 08 | 25 |
| மொத்தம் | 37 | 27 | 64 |

**6 பி.எஸ்சி (கணிப்பொறி அறிவியல்)**

| | ஆ | பெ | மொ |
|---|---|---|---|
| முதலாம் ஆண்டு | 25 | 22 | 47 |
| இரண்டாம் ஆண்டு | 14 | 18 | 31 |
| மூன்றாம் ஆண்டு | 20 | 22 | 42 |
| மொத்தம் | 59 | 62 | 121 |

**7 பி.ஏ-ஆங்கிலம்**

| | ஆ | பெ | மொ |
|---|---|---|---|
| முதலாம் ஆண்டு | 04 | 06 | 10 |
| இரண்டாம் ஆண்டு | 02 | 04 | 06 |
| மூன்றாம் ஆண்டு | 02 | 03 | 05 |
| மொத்தம் | 08 | 13 | 21 |

**8 எம்.காம்**

| | ஆ | பெ | மொ |
|---|---|---|---|
| முதலாம் ஆண்டு | 03 | 09 | 12 |
| இரண்டாம் ஆண்டு | 06 | 07 | 13 |
| மொத்தம் | 09 | 16 | 25 |

**9 எம்.எஸ்சி (கணிப்பொறி அறிவியல்)**

| | ஆ | பெ | மொ |
|---|---|---|---|
| **முதலாம் ஆண்டு** | 02 | 00 | 02 |
| **இரண்டாம் ஆண்டு** | 01 | 00 | 01 |
| **மொத்தம்** | 03 | 00 | 03 |

**10 முனைவர் பட்டம் (பி.எச்டி-தமிழ்)**

| | ஆ | பெ | மொ |
|---|---|---|---|
| **முழுநேரம்** | 01 | 02 | 03 |
| **பகுதிநேரம்** | 02 | 03 | 05 |
| **மொத்தம்** | 03 | 05 | 08 |

**11 முனைவர் பட்டம் (பி.எச்டி-வணிகவியல்)**

| | ஆ | பெ | மொ |
|---|---|---|---|
| **முழுநேரம்** | 01 | 00 | 01 |
| **பகுதிநேரம்** | 00 | 04 | 04 |
| **மொத்தம்** | 01 | 04 | 05 |

**12 முனைவர் பட்டம் (பி.எச்டி- கணிப்பொறி அறிவியல்)**

| | ஆ | பெ | மொ |
|---|---|---|---|
| **முழுநேரம்** | 00 | 01 | 01 |
| **பகுதிநேரம்** | 02 | 00 | 02 |
| **மொத்தம்** | 02 | 01 | 03 |

| **கல்லூரியில் பயிலும் மாணவர்கள் எண்ணிக்கை** | ஆ | பெ | மொ |
|---|---|---|---|
| **அரசு உதவிபெறும் பிரிவு** | 132 | 205 | 337 |
| **தற்செல்வப் பிரிவு** | 311 | 340 | 651 |
| **எம்.:பில் / பி.எச்டி** | 06 | 10 | 16 |
| **மொத்த மாணவர்கள் எண்ணிக்கை** | 449 | 555 | 1004 |

## அரசு உதவிபெறும் பிரிவில் பணிபுரியும் ஆசிரியர்கள்

- தமிழ்த்துறையில் இணைப் பேராசிரியர் ஒருவர், உதவிப் பேராசிரியர்கள் எட்டு பேர் என மொத்தம் ஒன்பது பேர் பணிபுரிந்து வருகின்றனர்.
- வணிகவியல் துறையில் இணைப்பேராசிரியர் ஒருவர் மற்றும் உதவிப்பேராசிரியர்கள் இரண்டு பேர் பணிபுரிந்து வருகின்றனர்.
- நூலகர் அரசு பணியிடத்தில் முனைவர் சா.அபிராமி அவர்கள் நூலகராகப் பணியாற்றி வருகிறார்.

**ஆசிரியர் அல்லாத அலுவலர்கள்**

- கல்லூரி அலுவலகப் பணியில் தட்டச்சர் ஒருவர், பதிவு எழுத்தர் ஒருவர் அலுவலக உதவியாளர் (2) இருவர் என நான்கு பேர் பணிபுரிந்து வருகின்றனர்.
- மேலும் காவலர் ஒருவர், தோட்டக்காரர் ஒருவர், சுகாதாரப் பணியாளர் ஒருவர்,பெருக்குபவர் ஒருவர் என நான்கு ஆசிரியரல்லா அலுவலகப்பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

**காலிப்பணியிடங்கள்**

- தமிழ்த்துறையில் இரண்டு உதவிப்பேராசிரியர் பணியிடம் காலியாக உள்ளன.
- ஆங்கிலத்துறையில் ஒரு உதவிப்பேராசிரியர் பணியிடம் காலியாக உள்ளது.
- வணிகவியல் துறையில் ஒரு உதவிப்பேராசிரியர் பணியிடம் காலியாக உள்ளது
- விளையாட்டு - உடற்பயிற்சி பயிற்றுநர் காலிப்பணியிடம் ஒன்றும், பகுதிநேரக் கணிதம் மற்றும் புள்ளியியல் ஆசிரியர் பணியிடம் ஒன்றும் காலியாக உள்ளன.
- அலுவலகத்தில் உதவியாளர் ஒரு பணியிடம் காலியாக உள்ளது.

**மாணவர்களுக்கு அரசால் வழங்கப்பட்ட உதவித் தொகைகள் (அரசு உதவிபெறும் பிரிவு)**

| வ.எண் | விவரம் | மாணவர் எண்ணிக்கை | மாணவர் பெற்ற தொகை |
|---|---|---|---|
| 1 | பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினருக்கான உதவித்தொகை | 28 | ரூ.58784 |
| 2 | பிற்பட்ட மற்றும் மிகவும்பிற்பட்ட மாணவர்களுக்கான உதவித்தொகை | 51 | ரூ.85673 |
| | மொத்தம் | 79 | ரூ.1,44,457 |

**உதவித் தொகைகள் –அரசு உதவிப்பெறா பிரிவு**

| வ.எண் | விவரம் | மாணவர் எண்ணிக்கை | மாணவர் பெற்ற தொகை |
|---|---|---|---|
| 1 | பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினருக்கான உதவித்தொகை | 45 | 76,405 |
| 2 | புண்ணியா பவுண்டேசன் | 8 | 1,37,000 |
| 3 | கல்லூரி அறக்கட்டளை | 69 | 3,50,000 |
| 4 | சாந்தி சோசியல் சர்வீஸ் | 15 | 1,50,000 |
| 5 | பெண் குழந்தை பாதுகாப்பு (Save our Daughter) | 16 | 3,57,000 |
| 6 | சக்தி மசாலா | 11 | 1,10,000 |
| | மொத்தம் | 164 | 1180405 |

கீழ்க்கண்ட பட்டியலில் உள்ள அன்பர்கள் வழங்கிய நிதி வங்கியில் வைப்புநிதியாக வைக்கப்பட்டு அதன் வட்டித் தொகையினை மாணவர்களுக்கு உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

| வ.எண் | பெயர் | வைப்பு நிதி ரூ | வட்டித் தொகை ரூ |
|---|---|---|---|
| 1 | திருமிகு சுப்புலட்சுமி நினைவு நிதி – பொம்மநாயக்கன்பாளையம் செல்வக்குமார், திருப்பூர் செந்தில் நாதன் நிதி – கல்வி உதவித்தொகை நிதி | 3,00,000 | ரூ32,193 (04.10.2024ல் வட்டித்தொகை கிடைக்கும். |
| 2 | அமெரிக்கா ரேணுகாதேவி – கல்வி உதவித் தொகை நிதி | 2,30,000 | ரூ27,701 (09.10.2024ல் வட்டித்தொகை கிடைக்கும். |
| | மொத்தம் | 5,30,000 | 59,894 |

கீழ்க்கண்ட அறக்கட்டளை நிதியின் வட்டித் தொகையைக் கொண்டு அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் நடைபெற்று வருகின்றன.

| | | | |
|---|---|---|---|
| 1 | கா.மீனாட்சி சுந்தரம் அறக்கட்டளை | 15000 | ரூ,1,943 (21.05.2024ல் வட்டித் தொகை கிடைக்கும்) |
| 2 | கோவைக் கிழார் அறக்கட்டளை | 40000 | ரூ 4,361 (21.05.2024ல் வட்டித் தொகை கிடைக்கும்) |
| 3 | கீரணத்தம் தெய்வ சிகாமணிக் கவுண்டர் அறக்கட்டளை | 10000 | ரூ 1,432 (21.05.2024ல் வட்டித் தொகை கிடைக்கும்) |
| 4 | வி.சி.சுப்பைய கவுண்டர் நிதி | 40000 | ரூ5,178 (18.07.2024ல் வட்டித் தொகை கிடைக்கும்) |
| 5 | மாணிக்க சுவாமிகள் அறக்கட்டளை நிதி | 20000 | ரூ 2,590 (18.07.2024ல் வட்டித் தொகை கிடைக்கும்) |
| 6 | ஆறுமுக அடிகள் நினைவு அறக்கட்டளை நிதி | 40000 | ரூ 5,178 (18.07.2024ல் வட்டித் தொகை கிடைக்கும்) |

## கல்லூரி விழாக்கள் கருத்தரங்குகள்

### தமிழ்த்துறை

### தமிழ்த்துறையில் நடைபெற்ற நிகழ்வுகள் (2023-24)

1. 23.06.2023 அன்று புதுமுக மாணாக்கர் தொடக்க விழா நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக கலை மாமணிமரபின்மைந்தன் முத்தையா அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.
2. 04.08.2023 வெள்ளிக்கிழமைஅன்று பன்னாட்டுக் கருத்தரங்கம் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக திருமிகு. பொன்முத்து சண்முகம் அவர்கள் கலந்து கொண்டார்.
3. 08.09.2023 அன்று மாணாக்கர் தமிழ் எழுச்சி மாநாடு, தஞ்சைதமிழ்ப்பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.
4. 26.09.2023 செவ்வாய்க்கிழமை அன்று முற்பகல் ஆதிசிவப்பிரகாசர் மாணாக்கர் அருள்நெறி இலக்கிய மன்றத்தொடக்க விழா நடைபெற்றது. இதில் புலவர் க.ச. அப்பாவு ஐயா அவர்கள் சிறப்புரை வழங்கினார்.
5. 26.09.2023 செவ்வாய்க்கிழமை அன்று பிற்பகல் தமிழ் மன்றத்தொடக்கவிழா, புதுமுக மாணாக்கர் வரவேற்பு விழா நடைபெற்றது. இதில் தொல்காப்பியச் செம்மல் புலவர் ஆ. காளியப்பன் அவர்கள் சிறப்புரை வழங்கினார்.
6. 27.09.2023 புதன்கிழமை அன்று தமிழ்க்கல்லூாயின் தமிழ்த்துறையில் பயின்ற எண் பான் வயது நிறைந்த மேனாள் மாணாக்கர்களுக்கு குருமகாசன்னிதானங்கள் வாழ்த்தி 5000 மதிப்புள்ள வெள்ளி விளக்கும் 1000 மதிப்புள்ள வெள்ளி விளக்கும் இளைதிருவருளும் வழங்கினார்.
7. 06.10.2023 அன்று தமிழ் இலக்கியங்களில் யானை என்னும் பொருண்மையில் தேசியக்கருத்தரங்கம் நடைபெற்றது.
8. 28.12.2023 முதல் 04.01.2024 வரை பயன்பாட்டுத்தமிழ் நுட்பங்கள் கற்றல் என்னும் பொருண்மையில் பிழையின்றிப்படித்தல் – எழுதுதல் – பேசுதல் பயிற்சி மாணாக்கர்களுக்கு வழங்கப்பட்டது.
9. 22.12.2023 அன்று ஈரோடு, வேளாளர்மகளிர் கல்லூரியில் மகளிர் எழுச்சி மாநாடு நடைபெற்றது.
10. 12.01.2024 அன்று பொங்கல்விழா நடைபெற்றது.
11. 09.02.2024 அன்று சிந்து முதல் பொருநைவரை கருத்தரங்கம் நடைபெற்றது.
12. 25.02.24 அன்றுகல்லூரி ஆண்டுவிழா நடைபெற்றது.
13. 14.03.2024 அன்று சூழலிய நோக்கில் தொல்காப்பிய மரபியல் என்னும் பொருண்மையில் தேசியக்கருத்தரங்கம் நடைபெற்றது.

### தமிழ்த்துறை மாணாக்கர் பெற்றச் சிறப்புகள்

28.6.2023 அன்று தமிழ் வளர்ச்சி துறையின் மூலமாக நடத்தப்பட்ட 2023 ஆம் ஆண்டிற்கான கவிதைப்போட்டியில் இளம் இலக்கியவியல் இரண்டாமாண்டு மாணவன் அ. அருள்பெனடிக்ட் பங்கேற்று முதல் பரிசு பெற்று ரூபாய் 10,000க்கான காசோலையைப்பெற்றார்.

3.7.2023 அன்று பொங்குதமிழ்ச்சங்கம் நடத்திய முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவில் முனைவர் பட்ட ஆய்வாளர்கள் அர்ஜுன், விக்னேஷ், தமிழசன், கவியரசன், பிரவீன்குமார், விஜயகுமார், இளங்கலை முதலாமாண்டு ஆனந்த், அஷ்விதா, இளங்கலை இரண்டாமாண்டு அருள்பெனடிக்ட், இளங்கலை மூன்றாமாண்டு வெயில்குமார், ரம்யா ஆகியோரின் கவிதைத்தொகுப்பினை நூலக வெளியிட்டுச்சிறப்பித்தனர்.

10.07.2023 அன்று அண்ணல் அம்பேத்கர் மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் பிறந்தநாளை முன்னிட்டுதமிழ்வளர்ச்சித்துறையால் நடத்தப்பட்ட பேச்சுப்போட்டியில் இளம் இலக்கியவியல் இரண்டாமாண்டு மாணவன் ஸ்ரீ.சிவராமகிருஷ்ணன் இரண்டாயிரம் ரூபாயினை மூன்றாம் பரிசாகவென்று சிறப்பித்தார்.

21.07.2023 அன்று கோவை கொடிசியா தொழிற்காட்சிவளாகத்தில் நடைபெற்ற கோயமுத்தூர் புத்தகத்திருவிழாவில் நடத்தப்பெற்ற பேச்சுப்போட்டியில் இளம் இலக்கியவியல் இரண்டாமாண்டு மாணவன் அ.அருள்பெனடிக்ட் முதல் பரிசு பெற்று ஆயிரத்துக்கான புத்தகம் பெறும் காசோலையைப்பெற்றார்.

12.08.2023 அன்று அனைத்து இந்திய தமிழ் எழுதாளர்கள் சங்கம் மாநில அளவில் நடத்திய கையெழுத்துப்போட்டியில் இளம் இலக்கியவியல் மூன்றாமாண்டு மாணவி கு.அருணா, மற்றும் இளம் இலக்கியவியல் இரண்டாமாண்டு மாணவி சு.காவ்யா ஆகியோர் கலை சுடர்விருதும், பதக்கமும், சான்றிதழும் பெற்றுச்சிறப்பித்தனர்.

13.08.2023 அன்று பேரூர் தமிழ்மன்றமும், நமது கல்லூரித்தமிழ்த்துறையும் நடத்திய கவிதைப்போட்டியில் இருபத்தைந்து மாணவ, மாணவிகள் சான்றிதழ் மற்றும் கேடயம் பெற்றுச்சிறப்பித்தனர்.

18.08.2023 அன்று தஞ்சைத்தமிழ்பல்கலைக்கழகத்தில் உலகத்தமிழ்க்காப்புக்கூட்டியக்கம் நடத்திய கட்டுரைப்போட்டியில் இளம் இலக்கியவியல் மூன்றாமாண்டு மாணவி ர.ரம்யா முதல் பரிசு பெற்று ரூபாய் ஐந்தாயிரம் காசோலையினைப் பெற்றுச்சிறப்பித்தனர்.

08.09.2023 அன்று தஞ்சை பெரிய கோவில், கங்கைகொண்ட சோழபுரம், தாராசுரம் போன்ற கோவில்களுக்கு தஞ்சை சரஸ்வதி மகால் நூலகம் அருங்காட்சியகம் பேரூராதீன ஆதிகுரு முதல்வர் - துறையூர் சிவப்பிரகாசர் சமாதிக்கோயில் ஆகியவற்றை தமிழ்த்துறை மாணவர்கள் கல்விசார் களமுறை பயணத்தின் மூலமாக பார்வையிட்டனர்.

16.09.2023 அன்று அமரர் அருட்செல்வர் டாக்டர் நா.மகாலிங்கம் அவர்கள் நினைவாக டாக்டர் என்.ஜி.பி கலை அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற கட்டுரைப்போட்டியில் மாவட்ட அளவில் இரண்டாம் பரிசுப்பெற்று 3,000 ரூபாய் மற்றும் மாநில அளவில் இரண்டாம் பரிசாக 4,000 ரூபாக்கான காசோலையினையும் இளம் இலக்கியவியல் மூன்றாமாண்டு மாணவி சா.லட்சுமிபிரபா பெற்றுச்சிறப்பிதார்.

22.09.2023 அன்று தமிழஞர் முனைவர் ம.ரா.போகுருசாமி ஐயா அவர்களின் நூற்றாண்டு விழா வினைமுன்னிட்டு பூ.சா.கோ கலை அறிவியல் கல்லூரித்தமிழத்துறை நடத்திய பேச்சுப்போட்டியில் இளம் இலக்கியவியல் மூன்றாமாண்டு மாணவன் ச.பிரகாதீஸ்வரன் சிறப்புப்பரிசு பெற்றுச்சிறப்பிதார்.

23.09.2023 அன்று தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரியில் கலை பண்பாட்டுத்துறை நடத்திய மாவட்ட அளவிலான இளைஞர் கலைப்போட்டியில் ச.சத்யப்பிரியா முதுகலை முதலாமாண்டு மாணவி கலந்து கொண்டு சிறப்புப்பரிசு பெற்றுச்சிறப்பிதார்.

23.09.2023 அன்று ஸ்ரீராமகிருஷ்ணமிசன் வித்யாலய கலை அறிவியல் கல்லூரியில் "சுவரம் " 2023 என்ற தலைப்பில் நடைபெற்றநாடகப்போட்டியில் தமிழ்த்துறைமாணவர்கள் கலந்து கொண்டு சான்றிதழ் பெற்றுச் சிறப்பித்தனர்.

18.11.2023 அன்று செம்மொழித்தமிழாய்வு மத்திய நிறுவன நிதிநல்கை ₹.20000/- பெற்று பாரதியார் விழாபேச்சுப்போட்டியும் கருத்தரங்கமும் நடத்தப்பெற்றது.

18.12.2023 அன்று முதல் 24.12.2023 வரை மூன்று நாட்கள் தமிழ் வளர்ச்சித்துறையால் மதுரைத்தமிழ் சங்கத்தில் நடத்தப்பட்ட இளந்தமிழர் இலக்கியப்பயிற்சிப்பட்டறையில் இளங்கலை இரண்டாமாண்டு மாணவன் அ. அருள்பெனடிக்ட் கலந்து கொண்டு பயிற்சிபெற்றார்.

10.01.2024 அன்று டாக்டர் எஸ். என். எஸ் இராஜலட்சுமி கலை அறிவியல் கல்லூரியின் தமிழ்த்துறை மற்றும் சிந்தனை மன்றம் நடத்திய பேச்சுப்போட்டியில் இளம் இலக்கியவியல் மூன்றாமாண்டு மாணவன் ச. பிரகதீஸ்வரன் மூன்றாம்பரிசாக ரூபாய் 750 மற்றும் சான்றிதழைப்பெற்றுச்சிறப்பிதார்.

31.01.2024 அன்று கல்லூரி கல்வி இயக்கம் கோவை நடத்திய முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டுவிழாவினை முன்னிட்டு நடத்தப்பெற்ற பேச்சுப்போட்டியில் இளம் இலக்கியவியல் இரண்டாமாண்டு மாணவர்களான அ. அருள்பெனடிக்ட் முதல் இடம்பெற்று ஆயிரத்தைநூறுரூபாயும், ஸ்ரீ. சிவராமகிருஷ்ணன் இரண்டாம் இடம்பெற்று ஆயிரம் ரூபாயும், இளம் இலக்கியவியல் மூன்றாமாண்டு மாணவி டே. ராஜாத்தி மூன்றாம் இடம் பெற்று ஐநூறுரூபாயும் சான்றிதழ்களுடன் பெற்றுச்சிறப்பித்தனர்.

1. **புதுமைப்பெண் திட்டம்**
   2023-24 ஆம் கல்வியாண்டில் அரசு உதவிபெறும் பிரிவில் புதுமைப்பெண் திட்டத்தின் வாயிலாக 87 மாணவிகள் பயனடைந்துள்ளனர்.
2. 2023-24 ம் கல்வியாண்டில் தமிழ்த்துறை சார்பாக சான்றிதழ் படிப்பு திருமுறைப்பண்ணிசை எனும் தலைப்பில் ஓதுவார் கமலக்கண்ணன் அவர்களால் நடத்தப்பெற்றது.

**<u>வணிகவியல் மன்றச் செயல்பாடுகள்</u>**

1. 12-03-2024 அன்று நம் கல்லூரியில் "பொதுவெளியில் பாமரன் அவமானப்படும் போது நீ செய்யும் எதிர்வினை" என்ற தலைப்பில் கோவை மாவட்ட அளவிலான கல்லூரி மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி நடைபெற்றது சுமார் 30 பேர் கலந்து கொண்டனர்.

1. 2023-2024 ஆம் கல்வியாண்டில் முதலாமாண்டு மாணவர் சேர்க்கை அனுமதிக்கப்பட்ட இடம் 60 பேர் இதில் சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 55 பேர் ஆண்கள் - 30 பெண்கள்-25.

2. 2023-2024 ஆம் கல்வியாண்டில் மூன்றாம் ஆண்டு மாணவர்களின் எண்ணிக்கை 53 பேர் மூன்றாம் ஆண்டு பயின்று தேர்வு எழுதியவர்கள் 51 இதில் தேர்ச்சி பெற்றவர்கள் 43 தேர்ச்சி பெறாதவர்கள் 08, தேர்ச்சி சதவீதம் 84.
3. 2023-2024 ஆம் கல்வியாண்டில் நமது கல்லூரியில் UG வகுப்பில் தேர்ச்சி பெற்றவர்கள் 2024 - 2025 ஆம் கல்வியாண்டில் நமது கல்லூரியில் PG M.Com வகுப்பில் 08 மாணவர்கள் சேர்ந்து பயின்று வருகின்றனர்.
4. 2023-2024 ஆம் கல்வியாண்டில் Quess Corporation Limited, சார்பாக நமது கல்லூரியில் நடைபெற்ற வேலைவாய்ப்பு முகாமில் 27 மாணவ, மாணவியர் கலந்து கொண்டு வாய்ப்பு பெற்றனர்.
5. 2023-2024 ஆம் கல்வியாண்டில் சூன் மாதம் 22-06-2023 அன்று நடைபெற்ற கோவை மாவட்ட அளவிலான முதலமைச்சர் கோப்பைக்கான கபடிப் போட்டியில் III-பி.காம் மாணவிகள் , வி.சுவேதா, எஸ்.பிரபா, எ.அபராஜிதா, கே.அபிதா ஆகிய நால்வரும் கலந்து கொண்டு வெண்கலப் பதக்கம் பெற்றனர்.

6. 10-08-2023 அன்று துறையின் சார்பாக இந்தியாவிற்கும் மொரிசியசு நாட்டிற்குமான வர்த்தகத் தொடர்பு என்ற தலைப்பில் ஒரு நாள் கருத்தரங்கு நடத்தப்பெற்றது. இதில் மொரிசியசு நாட்டைச் சேர்ந்த திரு.விஜயன் வையாபுரி அவர்கள் கலந்து கொண்டு சிறப்புச் சொற்பொழிவாற்றினார்.

7. 30-8-2023 அன்று நடைபெற்று மாவட்ட அளவிலான மாரத்தான் போட்டியில் III பி.காம் வகுப்பில் பயிலும் மாணவி ஆர்.இசக்கியம்மாள் கலந்து கொண்டு சிறப்புச் சொற்பொழிவாற்றினார்.

8. 30-08-2023 அன்று துறையின் சார்பாக மாணவர்களுக்கு சுயதொழில் மற்றும் தொழில் முனைவு சம்மந்தமாக ஒரு நாள் கருத்தரங்கு நடத்தப் பெற்றது . இதில் கோவை, கொடிசியாவின் முன்னாள் தலைவர் திரு.சுருளிவேல் அவர்கள் கலந்துகொண்டு மாணவர்களிடம் உரையாற்றினார்.

9. 28-09-2023 அன்று மத்திய அரசின் எம்.எஸ்.எம்.இ நிறுவனத்தால் நடைபெற்ற மின்னனு பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டு சான்றிதழ் பெற்றுள்ளார்.

10. 01-10-2023 முதல் 10-10-2023 வரை கோவை K.P.R.கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற தேசிய மாணவர் படை முகாமில் மாணவிகள் K.ஜனனி, R.இசக்கியம்மாள் மாணவர்கள் V.மோகன், M.சுதந்திரபாண்டி, S.அஜய் ஆகியோர் கலந்து கொண்டு சான்றிதழ் பெற்றுள்ளனர்.

11. 08-10-2023 அன்று தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் நடத்திய மாரத்தான் போட்டியில் III பி.காம் வகுப்பில் பயிலும் மாணவி ஆர்.இசக்கியம்மாள் கலந்துகொண்டு பரிசு பெற்றுள்ளார்.

12. 09-10-2023 அன்று துறையின் சார்பாக ஆசிரியர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி நடத்தப்பட்டது. இதில் திரு. ஸ்ரீ சசிக்குமார், சூலூர் அவர்கள் பயிற்றுநராக கலந்து கொண்டு பயிற்சி வழங்கினார்.

13. 15-10-2023 அன்று ரோட்டரி கிளப் ஆப் கோயமுத்தூர் நடத்திய மாரத்தான் போட்டியில் III பி.காம் வகுப்பில் பயிலும் பி. நாகராசு கலந்துகொண்டு பங்கேற்பு சான்றிதழ் பெற்றுள்ளார்.

14. 20-12-2023 அன்று மத்திய அரசின் நிதி உதவியும் மகாகவி பாரதியாரின் பிறந்தநாளை ஒட்டி பாரத மொழிகளின் திருவிழா என்ற தலைப்பில் 13-ஆம் கல்லூரியின் தமிழ்த்துறையின் சார்பாக நடைபெற்ற பேச்சுப்போட்டியில் எம்துறையைச் சார்ந்த மாணவி மாலதி கலந்துகொண்டு இரண்டாம் இடத்தில் வெற்றி பெற்று ரூபாய் 2000/- பரிசாகப் பெற்றார்.

15. 26-12-2023 அன்று துறையின் சார்பாக வணிகவியல் புலம் நேற்று-இன்று-நாளை என்ற தலைப்பில் சிறப்பு சொற்பொழிவு நடைபெற்றது. இதில் சேலம், அரசு கலைக் கல்லூரி வணிகவியல் துறை பேராசிரியர் முனைவர் ய.ம.சுகவனே கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.

16. 02-01-2024 முதல் 05-01-2024 வரை எம் துறையின் சார்பாக வணிகவியல் மாணவர்களுக்கான திறன் மேம்பாடு பட்டறைப் பயிற்சி வழங்கப்பட்டது. இதில் வணிகவியல் மாணவர்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர். பயிற்றுநராக பேராசிரியர் என்.வீரண்ணன், முனைவர் கே.ஜோதி, கே.பி.ஆர் கல்லூரி, கோவை திரு ஸ்ரீ தங்கராசு, இ.ஆர்.பி வல்லூர் திருமதி சி.விஜயமங்கை ஆகியோர் கலந்து பயிற்சி வழங்கினர்.

17. 15-02-2023 அன்று எம் துறையின் சார்பாக வணிகவியல் பட்ட மாணவர்களுக்காக வேலைவாய்ப்பு என்ற தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவு நடத்தப்பெற்றது. இதில் மொரீசியசு நாட்டைச் சார்ந்த திருமதி கதிர்வேல் சொர்ணம் அவர்கள் கலந்து கொண்டு மாணவர்களுடன் கலந்துரையாடினார்.

## ஆங்கில மன்றச் செயல்பாடுகள்

ஆங்கிலத் துறையின் இலக்கிய மன்றம் லிட்விட் இன் தொடக்க விழா 12/10/2023 அன்று நடைபெற்றது. கோயம்புத்தூர் ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் ஆங்கில உதவிப் பேராசிரியர் முனைவர் தினேஷ் குமார், சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு ஆங்கிலம் - வெற்றியின் ரகசியம் என்ற தலைப்பில் மாணவர்களுடன் கலந்துரையாடினார்.

ஆங்கிலத் துறையானது 27/1/2024 அன்று ஆசிரியர்களுக்கான ஒரு நாள் பயிலரங்கை ஏற்பாடு செய்தது. பேராசிரியர் முனைவர்.ஆர்.சரவண செல்வன், மூத்த பேராசிரியர்&தலைவர் (ஓய்வு,), பாரதியார் பல்கலைக் கழகத்தின் ஆங்கிலம் மற்றும் பன்னாட்டு மொழிகள் துறை அவர்கள் சிறப்பு பேச்சாளராக செயல்பட்டார்.

ஆங்கிலத் துறையானது 03/02/2024 அன்று சிறந்த தொழில் வாய்ப்புகளுக்கான மென் திறன்கள் குறித்த ஒருநாள் சர்வதேசப் பட்டறையை ஏற்பாடு செய்தது. திரு.மகேஷ் கந்தவடிவேல், பாங்க் ஆப் அமெரிக்காவின் துணைத் தலைவர், உங்களுக்குள் இருக்கும் சக்தி என்ற தலைப்பில் விரிவுரையாற்றினார்

## நாட்டுநலப்பணித் திட்டம் (NSS)

- 18.06.2023 அன்று நம் கல்லூரியில் பறை இசைமாநாடு நடைபெற்றது. அதில் நாட்டுநலப்பணித்திட்ட மாணவர்கள் தன்னார்வலராகப் பங்கேற்றனர்.
- 17.07.2023 அன்று பேரூர்ப்பட்டீசுவரர் திருக்கோயிலில் ஆடி அம்மாவாசையை முன்னிட்டு நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்கள் கூட்டத்தை ஒழுங்கு படுத்தும் பணியில் ஈடுபட்டனர்.
- 26.07.2023 அன்று நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்கள் இணைந்து நம்கல்லூரியின் வளாகத்தில் மூலிகைத்தோட்டம் அமைத்தனர்.
- 03.08.2023 அன்று நொய்யல் ஆற்றின் சோழன் படித்துறையைச்சுத்தம் செய்ய ஐம்பது நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர்.
- 25.08.2023 அன்று நம் கல்லூரிக்கு மேதகு தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்கள் வருகை புரிந்த போது நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்கள் அணிவகுப்பு மரியாதை வழங்கி வரவேற்றனர்.
- 26.09.2023 இலக்கிய மன்ற விழாவின் போது நாட்டு நலப்பணித்திட்ட செயலர்கள் பொறுப்பேற்கும் நிகழ்வில் நாட்டு நலப்பணித்திட்டச் செயலராக ஐ.வினிதா, ம.தரணிதரன் ஆகியோர் பொறுப்பேற்றனர்.
- 26.09.2023 பல்கலைக்கழக அளவிலான குடியரசு நாள் அணிவகுப்பிற்கான நாட்டு நலப்பணித்திட்ட தன்னார்வலர்கள் தேர்வு முகாமிற்கு நம் கல்லூரி நாட்டு நலப்பணித்திட்டம் சார்பாக இளம் இலக்கியவியல் மூன்றாமாண்டு மாணவியர் சு.மணிமேகலை மற்றும் ர.நிவேதிதா. இளம் இலக்கியவியல் மூன்றாமாண்டு மாணவர் சந்தோஷ் மற்றும் வணிகவியல் துறை இரண்டாமாண்டு மாணவர் கார்த்திக் ஆகியோர் கலந்து கொண்டனர்.
- 11.10.2023 அன்று நடைபெற்ற பேரூர் வட்டம் வட்டாட்சியர் தலைமையிலான தகவல் அறியும் உரிமை சட்டம் தொடர்பான விழிப்புணர்வுப் பேரணி நம் கல்லூரியில் இருந்து பேரூர் பட்டிப்பெருமான் கோயில் வரை நடைபெற்றது. இதில் நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்கள் பங்கேற்றனர்.
- 13.10.2023 அன்று மேனாள் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் கருணாநிதி நூற்றாண்டு விழாவையொட்டி பாரதியார் பல்கலைக்கழகத்தின் நாட்டு நலப்பணித்திட்டம் மற்றும்

உடற்கல்வித்துறை இணைந்து நடத்திய மினிமாராத்தானில் நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்கள் பங்கேற்றனர்.

- 27.12.2023 அன்று தமிழ் ஆட்சி மொழிச்சட்டம் இயற்றப்பட்ட நாளை நினைவு கூறும் வகையில் ஆட்சி மொழித்தொடர்பான பதாகை பிடித்து கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இருந்து தொடங்கி இரயில் நிலையம் சாலை லங்கா கார்னர் பாலம் வழியாக நகர்மண்டபம் சென்று திரும்ப மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முடிய விழிப்புணர்வு பேரணியில் நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர்.
- 12.01.2024 நிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட தூத்துக்குடி மாவட்டம் திருவைகுண்டம் அருகே உள்ள பராக்கிரமபாண்டி, சாமியாத்து, ஆலடியார், சிவராமமங்கலம், குலசேகரநத்தம் ஆகிய ஊர்ப்பகுதிகளுக்கு குருமகாசந்நிதானங்களின் தலைமையில் தவத்திரு சந்தலிங்க அடிகளார் கலை அறிவியல் தமிழ்க்கல்லூரி நாட்டு நலப்பணித்திட்டம் அலகு 1 மற்றும் அலகு 2 இணைந்து உணவுப்பொருட்கள், மளிகைப்பொருட்கள், போர்வைகள் போன்ற ரூபாய் 1 இலட்சம் மதிப்பிலான அன்றாடப் பயன்பாட்டு பொருட்கள் மாணவர்களின் மூலமாக மக்களுக்கு வழங்கப்பட்டன.
- தேசிய சாலைப்பாதுகாப்பு மாதவிழா 15.01.2024 முதல் 14.02.2024 வரை நடைபெற்றதில் நம் கல்லூரியில் 24.01.2024 மாவட்ட அளவிலான சாலைப்பாதுகாப்பு விழிப்புணர்வுப் பேரணியில் நாட்டுநலப்பணித்திட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர்.
- 25.01.2024 தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு வாக்காளர்கள் உறுதிமொழி ஏற்பு விழாவை நம் கல்லூரி ஒருங்கிணைத்தது. இதில் கல்லூரி முதல்வர், துறைத்தலைவர், பேராசிரியர்கள், மாணவர்கள்ஆகியோர்உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.
- 26.01.2024 குடியரசு தின விழாவை முன்னிட்டு நம் கல்லூரியில் நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்கள் அணிவகுப்பில் கலந்து கொண்டனர்கள்.
- 30.01.2024 தீண்டாமை ஒழிப்பு தினத்தை முன்னிட்டு தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி ஏற்பு நிகழ்வு நம் கல்லூரி நாட்டுநலப்பணித்திட்டம் சார்பாக ஒருங்கிணைக்கப்பட்டது.
- 08.03.2024 சிவனிரவுப்பெருவிழாவை முன்னிட்டு பேரூர்ப் பட்டிப்பெருமான் திருக்கோயில் நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்களால் ஒருங்கிணைக்கப்பட்டு மக்கள் ஒழுங்காற்றுப்பணி மாலை 6.00 மணி முதல் சிறப்பாக நடந்தது.
- 08.03.2024 மகளிர் தினத்தை முன்னிட்டு முதலிபாளையம் பேரூரடிகளார் மருத்துவமனையில் நாட்டு நலப்பணித்திட்டம் மூலமாக மகளிர் மருத்துவ முகாம் நடைப்பெற்றது.
- 11.03.2024 அன்று பேரூர் பட்டீசுவரர் திருக்கோயிலின் தெப்பக்குளத்தின் கரையில் பனைமரக்கன்றுகள் நடுதல் பணியில் நாட்டுநலப்பணித்திட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர்.
- 15.03.2024 தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை அறிவியல் தமிழ்க்கல்லூரியில் சிறப்பு சுகாதார முகாம் சிறப்பாக நடைப்பெற்றது. அதில் 500 க்கு மேற்பட்டோர் பரிசோதனை செய்து கொண்டனர்.
- 13.02.2024-19.02.2024 வரை நாட்டு நலப்பணித் திட்ட முகாம் நடைப்பெற்றது. தொடக்க விழாவில் நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர் வரவேற்புரை ஆற்றினார். பேரூராதீனம் 25ம் பட்டம் குருமகாசந்நிதானங்கள் தவத்திரு மருதாசலஅடிகளார் அவர்கள் அருளுரை வழங்கினார். பாரதியார் பல்கலைக்கழக நாட்டுநலப்பணித்திட்ட ஒருங்கிணைப்பாளர் ஆர்.அண்ணாதுரை அவர்கள் சிறப்புரை வழங்கினார். கல்லூரியின் முதல்வர், துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள் கலந்துக்கொண்டு சிறப்பித்தனர்.

- 14.02.2024 அன்று மத்துவராயபுரம் அரசு மேல்நிலைப்பள்ளியில் களப்பணி, வளாகத்தூய்மை, சுவர்களுக்கு வண்ணம் தீட்டுதல் போன்ற பணிகள் மாணவர்களால் மேற்கொள்ளப்பட்டது. பிற்பகல் சீர்வளர்சீர் கயிலைகுருமணி சமுதாயக்கல்லூரி தொலைதூரக்கல்வி இயக்கத்தின் நிர்வாகி திரு.ஜார்ஜ் அவர்கள் "மாணவர்களின் இலட்சிய நோக்கம்" எனும் பொருண்மையில் சிறப்புரை ஆற்றினார்.
- 15.02.2024 அன்று நாட்டு நலப்பணித்திட்டம் தத்தெடுப்பு கிராமமாகிய கல்கொத்திப்பதியில் களப்பணிகள் மாணவர்களால் மேற்கொள்ளப்பட்டது. பிற்பகல் "ICC Banking" என்ற பொருண்மையில் தமிழ்த்துறைத்தலைவர் பேராசிரியர் கா.திருநாவுக்கரசு அவர்கள் சிறப்புரை ஆற்றினார்.
- 16.02.2024 அன்று தென்கயிலை தவநெறிச்சாலை திருநெல்லிக்கா என்னும் இடத்தில் "சொத்து உருவாக்கம்" என்ற அடிப்படையில் நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்கள் கல் இருக்கைகள் அமைத்தனர். பிற்பகல் இணைப்பேராசிரியர் தமிழ்த்துறைத்தலைவர் கா.திருநாவுக்கரசு அவர்கள் "நாடு வாழ நற்பணி செய்யும் நாட்டு நலப்பணித்திட்டம்" எனும் பொருண்மையில் சிறப்புரை ஆற்றினார்.
- 17.02.2024 அன்று மத்துவராயபுரம் அரசு மேல்நிலைப்பள்ளியில் "கண் மருத்துவ முகாம்" டிரினிட்டி கண் மருத்துவமனை ஆர்.எஸ்.புரம் முகாமில் நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்கள் தன்னார்வலராகக் கலந்து கொண்டனர். பிற்பகல் வணிகவியல் துறை, உதவிப்பேராசிரியர் முனைவர் ம.செயப்பிரகாசம் அவர்கள் "மாணவனின் கடமை" எனும் பொருண்மையில் சிறப்புரை ஆற்றினார்.
- 18.02.2024 அன்று நல்லூர்ப்பதியில் களப்பணியில் மாணவர்கள் கலந்துகொண்டு மக்களிடம் மதுவிலக்கு பற்றியும் நெகிழி ஒழிப்பு பற்றியும் விழிப்புணர்வு பேரணி நடத்தப்பட்டது. பிற்பகல் உதவிப்பேராசிரியர் இராமகிருஷ்ணா மிஷன் வித்யாலயா கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் முனைவர் இரா.கோகுல் அவர்கள்"நிலமென்னும் நல்லாள் நகும்" எனும் தலைப்பில் சிறப்புரை ஆற்றினார்.
- 19.02.2024 அன்று முகாமின் நிறைவு விழா நடைபெற்றது. இதில் கல்லூரி முதல்வர், கல்விசார் இயக்குநர் சிறப்புரை ஆற்றினார்கள். மத்துவராயபுரம் ஒன்றிய ஊராட்சி மன்றத்தலைவர் திரு .கிட்டுசாமி அவர்களும் பூலுவாம்பட்டி ஊராட்சி மன்றத்தலைவர் திருமதி.ராஜலட்சுமி அம்மையார் அவர்களும் மகிழ்வுரை ஆற்றினார்கள். குப்பனூர் இயற்கை விவசாயக்கூட்ட அமைப்பின் தலைவர் சதாசிவம் ஐயாஅவர்களும் நாதேகவுண்டன்புதூர் வேளாண்மை விவசாய சங்க பெருநிலக்கிழார் செல்லப்பன் ஐயா அவர்களும் முன்னிலை வகித்தார்கள். நாட்டுநலப்பணித்திட்ட செயலர்கள் முகாம் அறிக்கையும் நன்றியுரையும் ஆற்றினார்கள்.
- 21.02.2024 அன்று உலகத்தாய் மொழிதினத்தன்று காந்திபுரம் மகளிர் பாலிடெக்னிக் கல்லூரியில் இருந்து வ.உ.சிபூங்கா வரை நடத்தப்பட்ட பேரணியில் நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்கள் பங்கேற்றனர்.
- 22.03.2024 உலக தண்ணீர் தினத்தை முன்னிட்டு கொங்கு நாடு கலை அறிவியல் கல்லூரியில் நடைபெற்றது. அதில் நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.
- 04.04.2024 அன்று பேரூரடிகளார் மருத்துவமனை இணைந்து Health Marathon போட்டி நடைபெற்றது. அதில் நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

- 18.04.2024 அன்று தீரன் சின்ன மலையின் 269 ஆவது பிறந்தநாள் விழாவை பேரூர் ஆதினத்தில் 25ஆம் பட்டம் குருமகாசந்நிதானங்களின் முன்னிலையில் மிகவும் சிறப்பான முறையில் நடைப்பெற்றது.

**<u>தேசியமாணவர் படை(NCC)</u>**

21.06.2023 அன்று அரசு கல்லூரியில் நடைப்பெற்ற "YOGA DAY" விழாவில் 10 தேசிய மாணவர் படை மாணாக்கர்கள் கலந்து கொண்டனர்.

17.09.2023 முதல் 24.09.2023 முடிய 10 மாணவர்களுக்கு எஸ்.என்.எஸ் தொழில் நுட்ப கல்லூரியில் நடைப்பெற்ற ஆண்டு பயிற்சி முகாமில் கலந்துகொண்டனர்.

01.10.2023 முதல் 10.10.2023 முடிய 17 மாணவர்களுக்கு கே.பி.ஆர் கல்லூரியில் நடைப்பெற்ற ஆண்டு பயிற்சி முகாமில் கலந்துகொண்டனர்.

30.10.2023 அன்று நடைபெற்ற சாலைப்பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணியில் தேசிய மாணவர் படை மாணாக்கர்கள் கலந்து கொண்டனர்.

இந்துஸ்தான் கலை அறிவியல் கல்லூரியில் 03.12.2023 முதல் 12.12.2023 முடிய நடைப்பெற்ற பயிற்சி முகாமில் தேசிய மாணவர் படை அலுவலருடன் ஒரு மாணவர் பங்குபெற்றார்.

**<u>செஞ்சிலுவைச் சங்கம் (</u>**YRC ) மற்றும் **<u>செஞ்சுருள் சங்கம் (RRC)</u>**

1.12-01-2024 அன்று தமிழகத்தின் தென்மாவட்டங்களில் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நம் கல்லூரியின் YRC, RRC அமைப்புகளைச் சேர்ந்த மாணாக்கர்கள் சேகரித்த துணிவகைகள் , உணவு தானியங்கள், மருந்துப் பொருள்கள் ஆகியவற்றைக் கல்லூரி முதல்வரிடம் ஒப்படைத்து உரிய இடத்தில் சேர்த்தப்பட்டது.

2. 22-01-2024 கோவை PSG மருத்துவமனையில் பாதிக்கப்பட்டோருக்கு நம் கல்லூரியின் YRC & RRC மாணவர்கள் குருதிக்கொடை (Blood Donate) வழங்கினார்கள்.

3. 11-01-2024 திருப்பூர் மாவட்டம் தாராபுரம் வட்டம் குண்டடம் ஊராட்சி - ஏரகாம்பட்டி கிராமத்தில் சுமார் 800 ஆண்டு பழமை வாய்ந்த சிவாலயத்தின் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாவில் நோய்தடுப்பு விழிப்புணர்வு முகாமை கிராம அரசு மருத்துவமனையுடன் இணைந்து கல்லூரியின் YRC & RRC மாணவர்கள் நடத்தினர்.

4. 21-02-2024 உலகத் தாய்மொழி நாளை முன்னிட்டு கோவை மகளிர் பாலிடெக்னிக் முதல் வ .உ.சி பூங்கா வரை நடைபெற்ற பேரணியை நம் கல்லூரியின் YRC & RRC மாணவர்கள் கலந்து கொண்டனர்.

5. 15-03-2024 நம் கல்லூரியின் YRC & RRC மற்றும் பூலுவபட்டி அரசு சுகாதார மையம் சார்பாக கல்லூரி மாணவர்களுக்கான மருத்துவ முகாம் நடைபெற்றது . இதில் முதலாமாண்டு மாணவர்களுக்கு Hemoglobin, Hight, Weight and BMI ஆகியன சரிபார்க்கப்பட்டன.

6. 17-03-2024 அன்று அன்னூர் வட்டம் குப்பேபாளையம் கிராமத்தில் பேரூரடிகளார் மருத்துவமனையின் சார்பில் நடைபெற்ற இலவச மருத்துவ முகாமில் நம் கல்லூரி YRC & RRC மாணவர்களும் இணைந்து செயல்பட்டனர்.

## அரசு உதவிப்பெறாப் பிரிவு (Unaided)

### கணிப்பொறித்துறை

1).27.3.24 அன்று கணிப்பொறி அறிவியல் துறை சார்பில் introduction to cyber security என்னும் தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது

2).8.2.24 அன்று கணிப்பொறி அறிவியல் துறை சார்பில் principles of network security என்னும் தலைப்பில் பயிற்சி பட்டறை நடைபெற்றது

3).11/1/24 அன்று என்.ஜி.எம் கல்லூரியில் நடைபெற்ற கருத்தரங்கில் முனைவர்.கருணாநிதி, சா.கற்பகதீபா ஆகியோர் கலந்து கொண்டு சான்றிதழ் பெற்றுள்ளனர்

4).11.9.23 அன்று எஸ்.என்.எஸ் ராஜலட்சுமி கல்லூரியில் நடைபெற்ற கருத்தரங்கில் முனைவர் கருணாநிதி கலந்து கொண்டு சான்றிதழ் பெற்றுள்ளார்.

5).24.07.24 - 30.07.24 வரை பாரதியார் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற நான் முதல்வன் திட்டம் சார்பாக நடைபெற்ற ஆசிரியர் பயிற்சி வகுப்பில், சி.கோமதி கலந்து கொண்டு சான்றிதழ் பெற்றுள்ளார்

6).08.10.23 அன்று நாகூர் மெட்ரிக் பள்ளியில் நடைபெற்ற கராத்தே போட்டியில் மனோஜ் குமார் என்ற மாணவர் வெற்றி பெற்று சான்றிதழ் பெற்றுள்ளார்

7).01.10.23 அன்று லயன்ஸ் கிளப் சார்பில் நடைபெற்ற மராத்தான் போட்டியில் சினேகா என்ற மாணவி வெற்றி பெற்று சான்றிதழ் பெற்றுள்ளார்

### வணிகவியல் மற்றும் கணினிப்பயன்பாட்டியல் துறை

1. 26. 10. 2023 – பெண்களுக்கான சுகாதார மற்றும் சுகாதார விழிப்புணர்வு திட்டம் என்ற தலைப்பில் சிறப்பு விருந்தினர் திருமதி காயத்ரி நாராயணசாமி, என்பவர் கலந்து கொண்டு சிறப்புரைஆற்றினார்.
2. 16.02.2024 – வாழ்க்கையில் வெற்றி பெறுவது எப்படி என்ற தலைப்பில் முனைவர் நான் சிகோமகன் சிறப்புரையாற்றினார்.
3. 22 2.2024 அன்று வியாபாரத்தில் வெற்றி பெறுவது எப்படி என்ற தலைப்பில் திரு சந்திரசேகர் சிறப்புரையாற்றினார்.
4. 02.03. 2024 அன்று வாழ்க்கை வாழ்வதற்கு என்ற தலைப்பில், கோவை மதன்பாரதி சிறப்படையாற்றினார்..
5. 07.03.2024 அன்று வெற்றி எனும் மாலை என்ற தலைப்பில் திருமதி.கவிதா வேணுகோபால் சிறப்புரையாற்றினார்.
6. 6.7.2024 அன்று. பி.சிவக்குமார்(ஐஏஎஸ்), மாணவர்களுக்கு ஊக்குவிக்கும் விதமான போட்டிதேர்வுகள் பற்றிய சிறப்புரை அளித்தார். மற்றும் பி.தமிழ்ச்செல்வி, ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு தொடர்பாக சிறப்புரையாற்றினார்.
7. 27. 8. 2024 அன்று ஆங்கிலத்துறை சார்பாக நடைபெற்ற கருத்தரங்கில் வணிகம் மற்றும் கணினிப்பயன்பாட்டியல் துறை சார்பாக 63 மாணவர்கள் கலந்து கொண்டு சான்றிதழ் பெற்றனர்.
8. திருமதி பிரியா, உதவிப்பேராசிரியர், வணிகவியல் மற்றும் கணினிப்பயன்பாட்டியல் துறை. 23.07.2023 அன்று ஆய்வு கட்டுரை, வணிக சூழலின் கீழ் பெரிய தரவு பயன்பாடுகள்

அடிப்படையிலான நிதி நிர்வாகத்தில் புரட்சியின் பாகுபாடுகள் என்ற தலைப்பில் ஆய்வு கட்டுரை ஒன்றினைவெளியிட்டார்.

**<u>விளையாட்டு துறை செயல்பாடுகள்</u>**

1. கேர்ள்ஸ் பிலே கோல்பால் கால்பந்து போட்டி 22.07.2023 அன்று நமது கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது, அதில் நமது கல்லூரி கால்பந்து பெண்கள் அணி கலந்து கொண்டு விளையாடினர்கள்.

2. 27.07.2023 அன்று டாக்டர்.A. P. J. அப்துல் கலாம் நினைவாக வாலிபால் போட்டிகோவை நேரு விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது, இதில் நமது கல்லூரி வாலிபால் பெண்கள் அணி கலந்து கொண்டு சிறப்பாக விளையாடி பரிசுகளை பெற்றனர்.

3. 08.09.2023 அன்று பெருந்துறை கொங்கு என்ஜினீயர் கல்லூரியில் நடைபெற்ற கொங்கு ட்ரோபி 2023 போட்டிகளில் நமது கல்லூரி சார்பாக பாட்மிண்டன், கபாடி, வாலிபால் போன்ற விளையாட்டுகளில் மாணவர்கள் மற்றும் மாணவிகள் பங்கு பெற்று சிறப்பாக விளையாடி பரிசுகளை பெற்றனர்.

4. 14.09.2023 முதல் 26.10.2023 வரை நடைபெற்ற பாரதியார் பல்கலைகழக கல்லூரிகளுக்கு இடையே நடைபெறும் போட்டிகளில் செஸ், கபாடி ஆ /பெ, கிரிக்கெட், கால்பந்து ஆ /பெ, வாலிபால், பாட்மிண்டன் பெண்கள் என அனைத்து விளையாட்டு போட்டிகளில் நமது கல்லூரி மாணவர்கள் மற்றும் மாணவிகள் கலந்து கொண்டு விளையாடினர்கள்.

5.1.10.2023 அன்று ரன் பார் டிரக் பிரீ 2023 மாரத்தான் போட்டியில் நமது கல்லூரி மாணவர்கள் மற்றும் மாணவிகள் கலந்து கொண்டு சிறப்பாக ஓடி சான்றிதழ்களையும், பரிசுகளையும் பெற்றனர்.

6.15.10.2023அன்று சிறகுகள் 2023 மாரத்தான் போட்டியில் நமது கல்லூரி மாணவர்கள் மற்றும் மாணவிகள் கலந்து கொண்டு சிறப்பாக ஓடி சான்றிதழ்களையும், பரிசுகளையும் பெற்றனர்.

**<u>வேலைவாய்ப்பு துறை செயல்பாடுகள் (Placement Cell)</u>**

1. நம் கல்லூரி மாணவர்களுக்கு தேவையான பல்வேறு அம்சங்களை கொண்ட பலவகையான பயிற்சி வகுப்புகளை நம் வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமாக நடத்தப்பட்டு, நம் மாணவர்களை செழுமை படுத்தி 100 சதவிகிதம் வேலை வாய்ப்பினை பெற்று கொடுத்தோம் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இதன் மூலம் வேலைக்கான நேர்முக தேர்வில் கலந்துகொண்ட அனைத்து மாணவர்களுக்கும் நல்லதொரு வேலை வாய்ப்பினையையும் வாங்கி கொடுத்துள்ளோம். சுமார் 208 மாணவர்கள் பயன்பெற்றனர்.

2. நம் மாநில அரசுடன் கைகோர்த்து மாணவர்களுக்கு தேவையான வாக்குரிமை பற்றி விழிப்புணர்வு நிகழ்வுகளும் நடத்தப்பட்டது. இதில் 129 மாணவர்கள் பயன்பெற்றனர்.

3. நமது வேலைவாய்ப்பு அலுவலகம் தனக்கென ஒரு NEWSLETTER தயார் செய்து "WISDOM VIBE " என்கிற பெயரில் வெளியிட்டது.

4 . நம் இறுதியாண்டு மாணவ நிர்வாகிகளால் "LINKS JOB " என்கிற வேலைவாய்ப்பு மாணவ மன்றம் சிறப்பாக செயல்பட்டது.

**நூலகம்**

நூலகத்தில் உள்ள நூல்க ளில் தமிழ்த் துறையி ன் கீழ்28,635 நூல்களும் ஆங்கிலத் துறையில் 216 நூல்களும் கணிப்பொறியியல் துறையில் 1993 நூல்களும் கணிதத் துறையில் 262 நூல்களும் வணிகவியல் துறையில் 1782 நூல்களும் போட்டித் தேர்வு, பொது நுல்கள் மற்றும் பொது அறிவு நூல்கள் வகையில் 1996 நூல்களும் குறிப்பெடுக்க மட்டும் என்ற வகையில் 2180 உள்ளன. இந்த வருடம் மட்டும் 376 புத்தகங்கள் அடிகளார் அவர்கள் நூலகத்திற்கு அன்பளிப்பாக வழங்கினார்கள், மேலும் தொலைநிலைக் கல்வி மூலம் திரு ஜார்ஜ் அவர்கள் இரண்டு அலமாரிகள் வழங்கினார்கள் , ஓய்வு பெற்ற ஆசிரியர் முனைவர் செல்லாத்தாள் அவர்கள் பிரிண்ட்டர் வழங்கினார்கள், முனைவர் பரமேசுவரன் அவர்கள் ஒரு பீரோ வழங்கினார்கள்.

சிதம்பர அடிகளார் நூலகத்தின் சார்பாக சுவைஞர் சுற்றம் எனும் நிகழ்வானது மாணவ மாணவியர் மற்றும் ஆசிரியர்களின் தனித்திறனை வெளிப்படுத்துகின்ற நோக்கத்தில் உருவானது . இந்நிகழ்வு 29-05-2021 அன்று தொடங்கி இன்றுவரை சிறந்த முறையில் நடைபெற்று வருகின்றது இதுவரை 170 வாரங்கள் நடைபெற்றுள்ளது. நமது நூலகத்தில் கோவைகிழார் அவர்களின் கையெழுத்துப் பிரதிகள் பராமரிக்கப் பட்டு வரும் நிலையில் அவைகளை பாதுகாக்கும் நோக்கில் , அவற்றை நம் ஆய்வு மாணவர்களைப் பயன்படுத்தி அச்சேற்றி, நமது புரவலர்களின் உதவியோடு 31-07-2022 தொடங்கி ஒவ்வொரு மகம் நாளன்றும் புத்தகமாக வெளியிட்டு வருகின்றோம். அவ்வகையில் நூலகம் சார்பாக வெளிவந்த புத்தகங்கள் மொத்தம் 23 ஆகும். கடந்த ஆகஸ்ட் 29 மற்றும் 30 ஆகிய தேதிகளில் நடைபெற்ற தேசியத் தரச்சான்றளிக்கும் குழுவினரின் ஏழு அளவுகோள்களில் நூலகத்திற்கு அதிக மதிப்பெண் வழங்கியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

31-07-2022 அன்று நமது நூலகம் வாயிலாக நூல்கள் வெளியீடு தொடங்கப் பெற்றது . அது முதல் ஒவ்வொரு மகம் நாளன்றும் கோவைகிழார் அவர்களின் கையெழுத்துப் பிரதிகளில் இடம் பெற்றுள்ள கட்டுரைகள், கவிதைகள், நாடகங்கள் மற்றும் பயண இலக்கியம் போன்றவை புத்தகங்களாக வெளியிட்டு வருகின்றோம்,இதுவரை 36 நூல்கள் வெளிவந்துள்ளன.

17-10-2023 அன்று ஐந்து ஓலைச் சுவடிகள் , கால்நடை மருத்துவம் பற்றிய குறிப்புகள் அடங்கியது உடுமலை இரவி அவர்களிடமிருந்து அடிகளார் வாயிலாக நூலகத்திற்கு வழங்கப் பெற்றது.

14-02-2024 அன்று பாண்டிச்சேரி ப்ரெஞ்சுப் பல்கலைகழகத்திலிருந்து பழம்பெறும் நூல்களை மின்னாக்கம் செய்வது குறித்த முனைப்போடு ஒரு அறிமுக நிகழ்வானது நடத்தப்பட்டது . அதனைத் தொடர்ந்து 19-03-2024 முதல் பழமையான (1800 முதல் 1950 வரை) நூல்களை மின்னாக்கும் பணியானது நடைபெற்று வருகின்றது , இதுவரை 500க்கும் மேலான நூல்கள் மின்னாக்கம் செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது, இன்றும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

_____@@@@@_____